Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 16

சுடர் : 38
கதிர் : 35

சனிக்கிழமை 31 டிசெம்பர் 2022

மார்கழி 16 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2053


# யாழ். மாநகரசபை நிர்வாகம் இனி திரிசங்கு நிலையில்!!!

- ✱ பதவி விலகுகிறார் மணிவண்ணன்
- ✱ புதிய மேயர் தெரிவு இடம்பெறாது - உள்ளூராட்சி ஆணையாளர் தகவல்
- ✱ சபையைக் கலைப்பது தொடர்பில் சட்டமா அதிபரே தீர்மானிப்பார்

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 31**

**யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு மேயர் தெரிவு இனி இடம்பெறாது என வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவ நாதன் தெரிவித்தார்.**

»15



மணிவண்ணன்

## புதிய மேயர் தெரிவா? நீதிமன்றை நாடுவோம்

### பதவி விலகும் மணி தரப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 31
யாழ். மாநகரசபைக்கு புதிதாக மேயரைத் தெரிவுசெய்ய முற்பட்டால் நீதிமன்றத்தை நாடுவோம் என்று, பதவியிலிருந்து விலகும் மேயர் வி.மணிவண்ணன் தரப்பினர், 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.
யாழ். மாநகரசபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் 7 மேலதிக வாக்குகளால் கடந்த 21 ஆம் திகதி தோற்கடிக்கப்பட்டது.

»15



## நெற்றிக்கண்களுடன் புத்தூரில் ஆட்டுக்குட்டி

யாழ்., டிசெ. 31
புத்தூர் நிலாவரையில் விசித்திரமான கண்களுடன் ஆட்டுக்குட்டி ஒன்று பிறந்துள்ளது.
நிலாவரைப் பகுதியில் ஆடு வளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயி ஒருவரின் ஆடே இவ்வாறு ஒரு குட்டியைப் பிரசவித்துள்ளது. அந்தக் குட்டியின் நெற்றிக்கு மேல், இரண்டு கண்களும் ஒன்றான நிலையில் காணப்படுகின்றன.
இந்த அதிசய ஆட்டுக்குட்டியை அந்தப் பகுதியைச் சேர்ந்த பலரும் ஆச்சரியத்துடன் பார்வையிட்டுவருகின்றனர். (அ-ஒ-23)

## யாழ்ப்பாணத்தில் சேவையாற்றியமை எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமே!

### பதவியுயர்வுடன் விடைபெற்றுச் செல்லும் மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 31
யாழ்ப்பாண மக்களுக்கு பணியாற்றியமை எனது வாழ்நாளில் கிடைத்த மிகப்பெரும் பாக்கியம் - இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.
யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்கின்றார். அவருக்கான பிரிவுபசார

»15

## உ.கிழங்கு உற்பத்தி யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 31
யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதம் பூச்சிய நிலையை அடைந்த உற்பத்திகள் சில மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்தார்.

»15

## வாகன இலக்கத்தகடுகளில் இனி மாகாணங்களின் எழுத்து இல்லை

### வாகனப் பரிமாற்ற படிவங்களின் எண்ணிக்கையும் குறைகிறது

கொழும்பு, டிசெ. 31
நாளை முதலாம் திகதி முதல் வாகன இலக்கத் தகடுகளில் மாகாணங்களை குறிக்கும் ஆங்கில எழுத்துகள் அகற்றப்படவுள்ளன என போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அத்துடன், வாகனப் பரிமாற்ற படிவத்தில் உள்ள பக்கங்களின் எண்ணிக்கையை முதலாம்

»15

## தவறி விழுந்து பெண் மரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 31
கிணற்றில் குளிப்பதற்காகச் சென்ற பெண் கிணற்றில் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.
மகாத்மா வீதி, அல்வாய் வடக்கைச் சேர்ந்த நாகேஸ்வரி சண்முகம் (வயது - 55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

»15

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே போட்டி: அரசியல் குழுவில் முடிவெடுக்கவில்லை

### சுமந்திரன் தெரிவித்த கருத்து தவறானது என்கிறார் கட்சித் தலைவர் மாவை.

யாழ்ப்பாணம், டிசெ. 31
எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள மூன்று கட்சிகளுடன் இணைந்தே போட்டியிடுவது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து தவறானது என்று அந்தக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போதுள்ள நிலையிலேயே உள்ளூராட்சித் தேர்தலை எதிர்

»15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை பொலிஸுக்கு எதிராக நேற்றுப் போராட்டம்

## கிராம அலுவலர்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 31

தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு எதிராக, தெல்லிப்பழை பிரதேசசெயலக கிராமஅலுவலர்களால் பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டமொன்று நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.






ஜே/239 பிரிவு கட்டுவன் மேற்கு கிராம அலுவலர் அலுவலகம் சில தினங்களுக்கு முன்னர் தீயிட்டு எரிக்கப்பட்டது.

இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை தெல்லிப்பழைப் பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை எனத் தெரிவித்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'சமாதான அலுவலர், சமாதான நீதிவானுக்கே இந்த நிலையா?', 'இன்று எங்களுக்கு நாளை உங்களுக்கு,' 'எங்கள் சேவைக்கு பாதுகாப்பு இல்லையா?', 'அலுவலகத்தை சேதமாக்கியோரை கைது செய்', 'தீ வைத்தது உங்கள் கை, வெந்தது உங்கள் சொத்து' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கிராம அலுவலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-14-27)



காலப்பந்தின் முடிசூடா மன்னன்

## தங்கமகன் பீலே நேற்று மறைவு!

பிரேசில், டிசெ. 31

கால்பந்தாட்ட உலகின் முடிசூடா மன்னன் என்று அழைக்கப்படுபவரும், மூன்று உலகக்கிண்ணங்களைக் கைப்பற்றிய உலகின் ஒரேயொரு வீரர் என்ற பெருமைக்குரியவருமான பிரேசிலின் தங்கமகன் பீலே (வயது 82) நேற்றுக் காலமானார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த பீலேவுக்கு கடந்த வருடம் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, புற்றுநோய்க்கட்டி அகற்றப்பட்டது. இதன் பின்னர் தொடர்ச்சியாக மருத்துவக் கண்காணிப்பில் பீலே இருந்தார். அவரின் உடல்நலனில் முன்னேற்றமும் பலவீனமும் மாறிமாறி ஆட்கொண்டது. இந்த நிலையிலேயே நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி ஒரு மணியளவில்) பீலே இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

பீலேவின் மறைவுக்கு கால்பந்தாட்ட உலகம் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த விளையாட்டு உலகமும் அஞ்சலி செலுத்தி வருகின்றது. உலகத்தலைவர்களும் தமது இரங்கல்களைத் தெரிவித்துள்ளனர். (ம)



## மோடியின் தாய் காலமானார் ஜனாதிபதி ரணில் இரங்கல்!

கொழும்பு, டிசெ. 31

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் ஹீரா பென் (வயது 100) நேற்றுக் காலை காலமானார். அவரின் மறைவுக்கு ஜனாதிபதி ரணில் இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த ஹீரா பென், நேற்று அதிகாலை உயிரிழந்ததை அடுத்து உலகத்தலைவர்கள் பலரும் அவரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

அரச ஊழியர்களுக்கான

## சம்பளமற்ற 5 ஆண்டு விடுப்பு 1,150 விண்ணப்பங்கள் ஏற்பு

கொழும்பு, டிசெ. 31

அரச துறை ஊழியர்களுக்கு சம்பளமின்றி ஐந்து ஆண்டுகள் விடுமுறை வழங்குவதற்கான வேலைத் திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஆயிரத்து 150 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அல்லது ஏனைய பயனுள்ள பணிகளுக்காக அரச ஊழியர்களுக்கு 5 வருடங்களுக்கு சம்பளம் அற்ற விடுமுறை வழங்க அமைச்சரவை அனுமதித்தது.

அரச ஊழியர்களின் சிரேஷ்டத்துவம் மற்றும் ஓய்வூதியத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த சம்பளமற்ற விடுமுறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அந்தவகையில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் ஆயிரத்து 150 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## நாடு முழுவதும் சீரான வானிலை

கொழும்பு, டிசெ. 31

நாடு முழுவதும் சீரான வானிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20 -30 கிலோமீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மன்னாரிலிருந்து புத்தளம் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 - 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது - என்றுள்ளது. (ம)

## வாள்வெட்டில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

இனந்தெரியாத கும்பலொன்று மேற்கொண்ட வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தத் தாக்குதல் சம்பவம் நல்லூர் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய குழுவினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். காயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-20)

## தனியார் நிறுவனங்களில் ஊழியர் நாளேடு கட்டாயம் வடக்கு மாகாண தனியார் ஊழியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 31

வடமாகாணத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள் எதிர்வரும் புதிய ஆண்டிலிருந்து ஊழியர் நாளேடு பயன்படுத்தப்பட வேண்டும். அவ்வாறில்லாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடமாகாண தனியார் ஊழியர் சங்கத்தின் தலைவர் சாமிநாதன் சிவகுமார் அறிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தனியார் நிறுவனங்களில் 80 வீதமான ஊழியர்கள் தமது வரவை நிறுவனங்களில் பதிவு செய்வதில்லை.

எனவே வருகின்ற புதிய ஆண்டில் இருந்து அவர்களுக்கான நாளேடு காட்சிப்படுத்துவதுடன் ஈ.ரி.எவ், ஈ.பி.எவ் இலக்கமும் நாளேட்டில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

அவ்வாறில்லாவிடின் தனியார் நிறுவனங்கள்மீது சட்ட நடவடிக்கை எடுப்போம். பெரிய தனியார் நிறுவனங்களில் இந்த நடைமுறை இருக்கின்றது. சிறிய நிறுவனங்கள், புடவைக் கடைகள், உணவகங்களில் இந்த நடைமுறை இருப்பதில்லை - என்றார். (ம-14-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லையில்

## சிறுமி துஷ்பிரயோகம் உறவினர் கைதானார்

முல்லைத்தீவு, டிசெ. 31

முல்லைத்தீவில் 13 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் உறவுமுறையான ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தந்தை மற்றும் சகோதரனுடன் வசித்துவந்த மேற்படி சிறுமியை, மாமா முறையான ஒருவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி பாடசாலை ஆசிரியரிடம் தெரிவித்ததை அடுத்து, பிரதேச செயலக சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார். (ச-19)

# மதமாற்றக் கொள்கையுடையவர் மாவட்டச் செயலராக வேண்டாம்

யாழில் போராட்டம்



யாழ்ப்பாணம், டிசெ. 31

மதமாற்றக் கொள்கையுடையவரை யாழ்ப்பாண மாவட்டச் செயலராக நியமிக்க வேண்டாம் என்று தெரிவித்து யாழ். மாவட்டச் செயலக முன்றிலில் சிவசேனை அமைப்பினரால் நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தற்போதைய யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றத்தில் செல்லவுள்ளார். அதனையடுத்து யாழ். மாவட்டத்துக்கு மதமாற்றக் கொள்கை உடையவர் புதிய மாவட்டச் செயலராக நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே அவரை யாழ்ப்பாணத்தில் மாவட்டச் செயலராக நியமிக்கக் கூடாது என்று போராட்டத்தில் ஈடுபட்ட சிவசேனை அமைப்பினர் தெரிவித்தனர். (ம-14,20)



## போக்குவரத்து விதிமீறல்; ஒன்பது பேர் சிக்கினர்

கிளிநொச்சி, டிசெ. 31

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போக்குவரத்து விதிகளை மீறி வாகனங்களை செலுத்திய குற்றச்சாட்டில் நேற்று வியாழக்கிழமை 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்து பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பின்போதே இந்தக் கைது இடம்பெற்றது. மதுபோதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமின்மை ஆகிய குற்றச்சாட்டுகளில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன் மோட்டார் சைக்கிள் திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும் கைதாகியுள்ளார்.

போக்குவரத்து விதிகளை மீறிய 9 பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். திருட்டுக் குற்றச்சாட்டில் கைதானவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்தார். (ச-113)

## கிளிநொச்சியில் பெண் கடத்தல்!

கிளிநொச்சி, டிசெ.31

கிளிநொச்சி, உதயநகர் பகுதியில் 22 வயதுப் பெண் ஒருவர் முச்சக்கர வண்டியில் கடத்தப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டியின் இலக்கம் வழங்கப்பட்டபோதும், இதுவரை சந்தேகநபர் கைது செய்யப்படவில்லை என்று பெண்ணின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடத்தப்பட்ட பெண் ஒருவரைக் காதலித்து வந்துள்ளார் என்றும், அவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்பது தெரிந்ததால், அவரைத் திருமணம் செய்ய மறுத்தார் என்றும் கூறப்படுகின்றது.

அதனால் ஆத்திரமடைந்த இளைஞர் ஆறு பேர் கொண்ட கும்பலுடன் பெண்ணின் வீட்டுக்குள் புகுந்து தாய் மற்றும் தம்பியைத் தாக்கிவிட்டு யுவதியை முச்சக்கர வண்டியில் கடத்திச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-27)

## மின் கசிவால் வீடு தீக்கிரை!

ஊரெழுவில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

மின்சாரக் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டு வீடொன்று முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் யாழ், ஊரெழு பகுதியில் கடந்த புதன்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளர்கள் வீட்டில் இல்லாத நேரத்திலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

வீடு தீப்பற்றி எரிவதை அவதானித்த அயலவர்கள் சுமார் 3 மணிநேர போராட்டத்தின்பின் தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

வீட்டிலிருந்த உடைகள், உடைமைகள், புத்தகங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் மின்சாரசபையினரிடம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. (ச-இ)

## பேனாவுக்கு பதில் குச்சி விற்பனை!

கொழும்பு, டிசெ. 31

பேனா விலை உயர்வு காரணமாக தற்போது பேனாக்களில் பயன்படுத்தப்படும் கார்பன் குச்சிகள் தனித்தனியாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்தக் குச்சிகள் 7 முதல் 10 ரூபாய் வரையில் விற்பனையாகின்றன.

தற்போது பேனாவின் விலை 25 முதல் 50 ரூபாய் வரை உள்ளதால் குறைந்த விலையில் இந்த குச்சிகளை வாங்கி பழைய பேனாவில் பயன்படுத்த முடியும் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சுற்றுச்சூழலில் பிளாஸ்ரிக்கின்

அளவைக் குறைக்கும் எனவும் இது பொருளாதார நன்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விடயம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# பெண்கள் வாழ்வுரிமை அலுவலகத்தில் திருட்டு

கண்டித்து நேற்று கவனவீர்ப்பு




கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சியில் இயங்கிவரும் பெண்கள் வாழ்வுரிமைச் சங்க நிறுவனத்தின் அலுவலகத்தில் காரியாலய தொழில்நுட்ப உபகரணங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் நேற்று முன்தினம் திருடப்பட்டுள்ளன.

அலுவலகத்தின் கூரையைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் 2 மடிக்கணினிகள், அலுவலக கணினிப் பொருள்கள், கண்காணிப்பு கமரா உள்ளிட்ட 8 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவத்தைக் கண்டித்தும் திருட்டில் ஈடுபட்டோரை சட்டத்தின் முன் நிறுத்துமாறு வலியுறுத்தியும் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்தின் முன்பாக கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பெண்கள் கறுப்பு பட்டிகளை அணிந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-113,56)

## கோடாவுடன் ஒருவர் அச்சுவேலியில் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 31

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அச்சுவேலி பகுதியில் 20 லீற்றர் கோடாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காங்கேசந்துறை விசேட மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரின் கண்காணிப்பு நடவடிக்கையின் போதே இந்தக் கைது இடம்பெற்றது. ஊரெழு பகுதியைச் சேர்ந்த 36 வயதுடையவரே கைது செய்யப்பட்டார். அவரைச் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய ரீதியிலான கர்நாடக இசைப்போட்டியில் ஆண்கள் பிரிவில் புனித பத்திரிசியார் கல்லூரி அணியினர் முதலிடம் பிடித்துள்ளனர். (ம)




தேசிய ரீதியில் நடத்தப்பட்ட காவடி நடனப்போட்டியில் தெல்லிப் பழை யூனியன் கல்லூரி தேசிய ரீதியில் முதலிடம் பெற்றது. அனுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் மேற்படி கல்லூரியின் மாணவர்கள் பங்குபற்றிக் குறித்த சாதனையை நிலைநாட்டியுள்ளனர். (ம-66)



தேசிய ரீதியிலான தனி நடன கரகப்போட்டியில் முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவன் தியாகராசா ஜயிந்தன் முதலிடத்தைப் பெற்றார். (ச-19)

தேசிய ரீதியிலான பரதநாட்டியப் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் மோகனதாஸ் கிசோன் முதலிடம் பிடித்துள்ளார். (ம)





தேசிய மட்ட நடனப் போட்டியில் ஏழாலை மகா வித்தியாலய மாணவிகள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். (ம-66)

# 2023 புத்தாண்டு ராசிபலன்

மார்கழி மாதம் 17ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை வளர்பிறை தசமி திதியில், சம நோக்குடைய அஸ்வினி நட்சத்திரம், மேடம் ராசி, கன்னி லக்னத்தில், சிவம் நாமயோகத்தில், தைத்துலம் நாமகர ணத்தில், நள்ளிரவு 12.01 மணிக்கு 01.01.2023 ஆம் ஆண்டு பிறக்கிறது.

## மகரம்

அயராது உழைக்கும் உழைப்பாளி நீங்கள். சுக்கிரன் உங்கள் ராசிக்குள் நிற்கும் போது 2023 புத்தாண்டு பிறக்கிறது. அடிப்படை வசதிகள் பெருகும். கனிவான பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள். உங்களின் தோற்றப்பொலிவு கூடும்.

குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். வேலை தேடும் அன்பர்களுக்கு நல்ல வேலை அமையும். அடகில் இருக்கும் நகையை மீட்பீர்கள்.

உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பணம் வரத் தொடங்கும். தடைகள் நீங்கும்.

வருட ஆரம்பம் முதல் 22.04.2023 வரை குரு பகவான் உங்கள் ராசிக்கு 3ம் வீட்டில் நிற்பதால், கடினமாக உழைத்து இலக்கை எட்டிப் பிடிப்பீர்கள். எதிர்பார்த்த வகைகளில் பணம் வரும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும்.

குருபகவான் 23.4.2023 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 4ம் வீட்டில் அமர்கிறார். மனஉளைச்சல், மறைமுக எதிர்ப்பு, வீண் விமர்சனம் வரக்கூடும்.

8.10.2023 வரை உங்கள் ராசிக்கு 10ல் கேதுவும், 4ம் வீட்டில் ராகுவும் நீடிப்பதால் அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக் குள்ளாவீர்கள். உத்தியோகத்தில் இடமாற்றங்கள், சம்பளப் பிரச்சினை, மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். 9.10.2023 முதல் வருடம் முடியும் வரை ராசிக்கு 9ல் கேது தொடர்வதால் சொத்துப் பிரச்சினை தலைதூக்கும். ராகு 3ம் வீட்டில் அமர்வதால் பயம், படபடப்பு நீங்கும்.

ஆண்டு தொடக்கத்தில் ஜன்மச் சனி தொடர்வதால் பழைய பிரச்சினைகள் தலைதூக்கும். கணவன் - மனைவிக்குள் சின்னச் சின்னச் சண்டைகள் வந்துபோகும்.

29.3.2023 முதல் 23.8.2023 வரை சனிபகவான் அதிசாரத்தில் 2ஆம் வீடான கும்ப ராசியில் சென்று பாதச் சனியாக அமர்வதால் யாரையும் நம்பி எந்த முடிவும் எடுக்காதீர்கள்.

வியாபாரிகளே! இந்தாண்டு பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் ஆண்டு தொடக்கத்தில் வேலைச்சுமை வாட்டும். பதவி உயர்வு தடையின்றி கிடைக்கும்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு அதிரடி முன்னேற்றங்களைத் தருவதாக அமையும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். அனுகூலம் உண்டாகும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனவருத்தங்கள் நீங்கும். வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும். செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிள்ளைகளின் உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. உறவினர்களால் செலவுகள் ஏற்படும். சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவுகளால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** எந்த முடிவையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும் .

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்பு கரையும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் லாபம் இருக்கும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்களால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையாக இருக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



**நாளொரு நல்வார்த்தை**

"மிகப் பெரிய தீ? ஆசை மிக கூர்மையான வாள்? கோபத்தில் கூறப்படும் வார்த்தை மிகப்பெரிய செல்வம் தர்மம்"
– புத்தர்

# அணுகுமுறை மாறாதவரை அணைவு சாத்தியமில்லை

பூகோள அரசியல் போட்டியில் இலங்கை மூழ்கிக் கொண்டிருக்கின்றது. அதில் தமிழர் தாயகமும் விதி விலக்கல்ல. இந்திய – சீன வல்லாதிக்கப் போட்டியின் விளைவுகளை கண்ணெதிரே தமிழ்ச் சமூகம் எதிர்கொள்கின்றது.

தமிழர் தாயகத்தை நோக்கி போர் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகளின் பின்னர் சீனா காலடி எடுத்து வைக்கின்றது. இவ்வளவு காலமும் அக்கறை காண்பிக்காத சீனா இப்போது ஏன் வருகின்றது என்ற கேள்வி தமிழ் மக்களிடத்தே உண்டு. சீனாவின் நகர்வுகள் இரகசியமாக வேறு நோக்கத்துடன் இருப்பதாகவே கருதுகின்றார்கள். அதற்கு அமைவாக சீனாவின் திட்டங்களும் வெளிப்படைத்தன்மையுடன் இல்லை.

வடக்கு மாகாணத்துக்கு சில நாள்கள் சுற்றுப் பயணமாக வந்திருந்த சீனாவின் பதில் தூதுவர், யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். பலதுறைகளைச் சேர்ந்த ஆறு பேர் அதில் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழ் மக்கள் சீனாவை ஏன் எதிர்க்கின்றார்கள் என்பதை அறிவதுதான் அவரது சந்திப்பின் முக்கியமான நோக்கம். சீனா வடக்கில் பல வடிவங்களில் கால் பதிக்க முயன்றாலும் ஒவ்வொரு முயற்சியும் எதிர்க்கப்படுகின்றது. இதன் காரணமாகவே அதற்கான காரணங்களை ஆராய்வதற்கு அவர்கள் இப்போது புறப்பட்டுள்ளனர்.

இறுதிக்கட்டப் போரின்போது தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு சீனா, அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் உதவி புரிந்தன. போர் முடிவுக்கு வந்த பின்னரான காலப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தின் அபிவிருத்திக்கு அமெரிக்கா, இந்தியா நாடுகளால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன. அதேபோன்று இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவும் இந்த இரு நாடுகளும் செயலாற்றியிருந்தன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணவேண்டும் என்ற அழுத்தத்தை இலங்கை அரசாங்கத்துக்கு அவை பிரயோகித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால், சீனாவோ இன்னமும் இலங்கை அரசாங்கத்தை மாத்திரம் கண்மூடித்தனமாக ஆதரித்துக் கொண்டிருக்கின்றது.

ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை, நாட்டின் அரசாங்கத்துடன்தான் தமது உறவுகள் இருக்கும் என்பன சீனாவின் கொள்கைகள் என்பதைச் சொல்லிக் கொண்டு இலங்கை அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் கேட்டுக் கேள்வியின்றி முட்டுக்கொடுக்கின்றார்கள்.

இதுவே தமிழ் மக்கள் சீனாவை நம்பாமல் எதிர்ப்பதற்கு பிரதான காரணமாக இருக்கின்றது. இலங்கை அரசாங்கத்தை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. இன்றுவரையில் எதிரியாகவே பார்க்கின்றனர். எதிரிக்கு உதவுகின்ற ஒரு நாடாகவே சீனாவையும் நோக்குகின்றனர். இதனால்தான் தமிழர் தாயகத்தில் சீனா காலடி வைக்கும் இடமெல்லாம் எதிர்ப்பாகவே இருக்கின்றது.

சீனா தனது அணுகுமுறையை – கொள்கையை மாற்றாதவரை எந்தவொரு வடிவத்திலும் எந்தவொரு தருணத்திலும் தமிழர் தாயகத்தில் காலடி வைக்க முடியாது.




# வல்லாதிக்கப்போட்டிக்காகவே அரிசியை வழங்குகின்றது சீனா

யாழ்ப்பாணம், டிசெ. 31

கடந்த சில நாள்களாகச் சீன அரிசி பற்றி அதிகம் பேசப்படுகிறது. சமைத்த பலர் சாப்பிட முடியாதவாறு குழைந்துபோய் இருப்பதாகக் குறைப்பட்டுக்கொள்கிறார்கள். இது சீனர்களின் உணவுப் பண்பாட்டில் இடம்பிடித்துள்ள பசைத் தன்மைகூடிய ஸ்ரிக்கி றைஸ் ஆகும். தமிழ் மக்களின் உணவுப் பண்பாட்டில் கடலட்டை எவ்வாறு இல்லையோ, அதேபோன்றே இந்த ரக அரிசியும் இல்லை. சீனா மனிதாபிமான நோக்கில் அரிசியை வழங்கியிருந்தால் எங்களது பயன்பாட்டிலுள்ள அரிசியைத் தெரிவு செய்து வழங்கியிருக்கும். ஆனால், இந்தச் சீன அரிசியில் மனிதாபிமானம் இல்லை. வல்லாதிக்கப் போட்டி அரசியலே அதிகமாகவுள்ளது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பட்டினியால் குடும்பங்கள் படும் அவலத்தை சீனா சாதகமாகப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் மனதிலும் தமிழ் மண்ணிலும் வேரூன்றும் முயற்சியாகவே அரிசியை வழங்கி வருகிறது. பசியோடு இருக்கும் மக்களைச் சீன அரிசியை நிராகரிக்குமாறு எவருமே கோரமுடியாதபோதும் இந்த அரிசியிலுள்ள அரசியலை எமது மக்களுக்குப் புரியவைக்கவேண்டும்.

வடக்குக் கிழக்கில் உள்ள வெற்றுக் காணிகளில் எமது பொது அமைப்புகள் அல்லது தன்னார்வலர்கள் உணவு உற்பத்தியில் ஈடுபட முன்வரவேண்டும். பல வெற்றுக் காணிகளின் உரிமையாளர்கள் புலம்பெயர்ந்து வாழுகிறார்கள். குத்தகை அடிப்படையிலேனும் பயிர்ச்செய்கைக்கு காணிகளை வழங்க முன்வரவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் பசியால் ஒரு சிறுவன் இறந்ததாகப் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. இது ஒட்டுமொத்த ஈழத்தமிழ்ச் சமூகத்துக்குமே இழுக்காகும். போர்க்காலத்தில் பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டிருந்த போதுகூட பட்டினியால் எவரும் இறந்ததில்லை. திருவிழாக்காலங்களில் மட்டுமே அன்னதானங்கள் என்று இல்லாமல் இக்குடும்பங்களின் சில நாள் பசியையேனும் போக்க எமது ஆலயங்களும் முன்வரவேண்டும் - என்றார். (ஒ-5)

# வரலாற்றில் இலங்கை சபிக்கப்பட்ட தேசமே!

## சந்தியா எக்னலிகொட சாபம்

இலங்கை ஒரு சபிக்கப்பட்ட தேசம். குவேனி காலத்திலிருந்தே சபிக்கப்பட்ட தேசம் என சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குவேனியின் காலம் முதல் பெண்கள் இந்த நாட்டை சபித்துள்ளனர். அரசியல் அதிகாரத்துக்குவந்த அனைவரும் இந்த நாட்டில் பெண்களின் மகிழ்ச்சியைப் பறித்துள்ளனர்.

தங்களுக்கு நீதி வழங்கப்படவில்லை என்பதை அறிந்தும் பெண்கள் இந்த நாட்டை சபித்துள்ளனர். இந்த நாடு இந்த சாபங்களில் இருந்து விடுபடாது. இந்த நாடு சாபங்களில் இருந்து விடுபட வேண்டும் என்றால் பெண்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்- என்றார். (ம)

**நாளை**
01.01.2023
ஞாயிற்றுக்கிழமை
மார்கழி 17

சுபநேரம் : 09.29 – 10.59
ராகுகாலம் : 04.59 – 06.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்குத் தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 31
சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல்கலைக் கழகத்துக்கு அனுமதிபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நிலைய பிர தான மண்டபத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறைபேராசிரியர்எஸ்விஜயகுமார், சட்டத்தரணியும் சமூக செயற்பாட்டாளருமான சாருஜா சிவனேசன், கலைமகள் இலவசக்கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ச-125)





# தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 31
வட்டுக்கோட்டையில் பொருண்மியம் நலிந்த தெரிவுசெய்யப்பட்ட 125 மாணவர்களுக்கு பெறுமதிமிக்க கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் 'கல்விக்கு கைகொடுப்போம்' எனும் தொனிப்பொருளில் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளை தமிழரசுக்கட்சிதலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன், வலி. மேற்குப் பிரதேசசபை தவிசாளர் நடனேந்திரன் சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-125)

# சமத்துவக் கட்சி அலுவலகம் வவுனியாவில் திறந்துவைப்பு



வவுனியா, டிசெ. 31
சோஷலிச சமத்துவக் கட்சியின் வன்னி தலைமை அலுவலகம் கடந்த புதன்கிழமை வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.
சமத்துவக் கட்சியின் தவிசாளர் சு. மனோகரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.
கட்சியின் பெயர்ப்பலகையை தவிசாளர் திரை நீக்கம் செய்ய அலுவலகத்தை கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மு. சந்திரகுமார் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.
நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வவுனியா தெற்கு பிரதேசசபையின் தவிசாளர், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கிசோர், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் நடராஜன், கட்சியின் பிரதேசசபை உறுப்பினர்கள், மத்திய குழு உறுப்பினர்கள் என பலர் பங்கேற்றிருந்தனர். (ச-214)



# பன்றித்தலைச்சி கண்ணகி ஆலயத் திருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 31
புகழ்பெற்ற தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. திருவிழா தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.
மகோற்சவத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை மார்கழி திருவாதிரை நாளன்று முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ச-66-131)

# சிவராத்திரியை முன்னிட்டு மாணவரிடையே போட்டி!

பளை, டிசெ. 31
பளை இயக்கச்சி, மல்வில் கிருஷ்ணன் ஆலய பரிபாலன சபையினரால் மகா சிவராத்திரியை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள அறநெறி பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
போட்டிகளில் பங்குபெறும் மாணவர்கள் நாளை முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.
போட்டிகள் எதிர்வரும் 22ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் இடம்பெறும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-9)



## கிரிக்கெட்டில்

# தேசியத்துக்குத் தெரிவாகிய முல்லை வீரர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 31
2022ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண கிரிக்கெட் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவான முல்லைத்தீவு மாவட்ட வீரர்கள் விசுவமடு வள்ளுவர்புரம் பாரதி மகா வித்தியாலயத்தில் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.
நிகழ்வில், பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் கலந்துகொண்டார். இதன்போது தேசிய மட்டப் போட்டியில் பங்குபெறும் வீரர்களுக்கு வி.பி பவுண்டேசனின் ஸ்தாபகர் தெ.இந்திரகுமாரால் வீரர்களுக்கான விளையாட்டுச் சீருடைகளும் வழங்கப்பட்டன. (ச)



பிள்ளையார் பெருங்கதை விரத நிறைவையொட்டி குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் விசேட கணபதி ஹோமமும் திருமுறைப் பாராயணமும் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.
திருக்கேதீச்சர மடத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த தருமை ஆதீனப் புலவர் எம்.கே.பிரபாகரமூர்த்தி சிறப்புரையாற்றினார். (ச-66)

# ஓய்வூதியம் பெறும் தினங்கள் காட்சி

சாவகச்சேரி, டிசெ. 31
2023ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியம் பெறும் தினங்கள் ஓய்வூதியத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
அவை அந்தந்த கிராமஅலுவலர் பிரிவுகளின் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
கடதாசித் தட்டுப்பாடு காரணமாக அடுத்த வருடத்துக்கான ஓய்வூதிய திகதிகள் பிரதேச செயலகத்தால் அனுப்பப்படமாட்டாது.
ஓய்வூதியர்களுக்கான 2023ஆம் ஆண்டுக்கான உயிர்வாழ் சான்றிதழ் பதிவுகளுக்கு கிராம அலுவலரிடம் கையொப்பமிட செல்லும்போது ஓய்வூதிய திகதிகள் பற்றிய விவரங்களை அங்குள்ள விளம்பரப்பலகையில் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுவர்க்க வாசல் உற்சவம்

பளை, இயக்கச்சி, மல்வில், கிருஷ்ணன் ஆலயத்தில் சுவர்க்க வாசல் உற்சவம் நாளை மறுதினம் இரண்டாம் திகதி இரவு இடம்பெறவுள்ளது. சுவர்க்க வாசல் உற்சவத்தைத் தொடர்ந்து விசேட பூசை வழிபாடுகளும் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்தனர். (ச-9)


## அறை வாடகைக்கு

நீராவியடிப் பிள்ளையார் கோயிலிற்கு அண்மையில் விசாலமான தனி அறை பெண்களுக்கு மட்டும் வாடகைக்குண்டு.

T.P: 077 392 7955

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 'திருக்குறளை மையப்படுத்தல்' எனும் தொனிப்பொருளில் யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று போட்டிகள் நடத்தப்பட்டன. (ச-66)


## மரண அறிவித்தல்



### திரு. சின்னக்குட்டி தருமலிங்கம்

தோற்றம் 09.04.1939

மறைவு 30.12.2022

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் நகுலேஸ்வரா வீதி கீரிமலையினை வசிப்பிடமாகவும் கப்பல்வளவு ஐயனார் கோயிலடி சுன்னாகத்தினை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னக்குட்டி தருமலிங்கம் நேற்று (30.12.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி லட்சுமி தம்பதியினரின் பாசமிகு மகனும். காலஞ்சென்ற செல்லையா இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும். திருமதி இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும். காலஞ்சென்றவர்களான சண்முகராசா. இரத்தினம். கனகேஸ்வரி. சரஸ்வதி மற்றும் கந்தசாமி. இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பாலச்சந்திரன். பாலகிருஷ்ணன் (ஆசிரியர் - கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை ). சரண்யா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானலிங்கம் (சுவிஸ்). கலாநிதி அருளரசி (சிரேஷ்ட விரிவுரையாளர் - பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனஞ்சயன் (சுவிஸ்). ஹரிணி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.12.2022) வெள்ளிக்கிழமை ஐயனார் கோவில் வீதி சுன்னாகத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கப்பல் வளவு,
ஐயனார் கோயில் வீதி, சுன்னாகம்.

தகவல்:
பாலகிருஸ்ணன்(மகன்)
077 617 9115


## ஏகாதசி பெருவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 31

வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோயில் வைகுந்த ஏகாதசிப் பெருவிழா நாளைமறுதினம் 2ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. தொடர்ந்து பஜனை, சமயசொற்பொழிவு, கலைநிகழ்வுகள் இடம்பெறும் என ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (ச)



யாழ்.தாவடி வேதவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் கஜமுக சங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ச-66)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.31

சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் திருவாசக முற்றோதல் நிகழ்வு சைவ பரிபாலன மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அடியவர்களைக் கலந்துகொள்ளுமாறு சபையின் செயலாளர் இரா. செல்வவடிவேல் கேட்டுக்கொண்டுள்ளார். (ய)



நீராவியடி ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இளையோர் பிள்ளையார் கதை அரங்கம் நிகழ்வு விநாயக விரத நிறைவுநாளான கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்றது. (ம-66)


## மரண அறிவித்தல்

தோற்றம்

25
02
1950



மறைவு

28
12
2022

### நடராசா சிவரட்ணம்

(ஓய்வு நிலை உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம்)

ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறையினைப் பிறப்பிடமாகவும் முருகையன் கோவிலடி, வல்வெட்டித்துறையினை வசிப்பிடமாகவும் கொண்ட **நடராசா சிவரட்ணம்** அவர்கள் 28.12.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா வள்ளியம்மாள் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் அருந்ததி தம்பதிகளின் மூத்த மருமகனும் நளினி (வசந்தி) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி பிரதீபா சசிகுமார் (ஆசிரியை), சாரூபன் சிவரட்ணம் (நிர்வாக இயக்குநர் V2 Travels மற்றும் கனடா குடிவரவு ஆலோசகர்), திருமதி காருண்யா மாதீபன் (முன்னாள் உதவி முகாமையாளர் மக்கள் வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. வே.சசிகுமார், திருமதி சா.விசாந்தினி, திரு. க.மாதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிழினியா (அமரா), அருள்சாயித்யன், அருந்ததி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.01.2023 (திங்கட்கிழமை) அன்று நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக மயிலியதனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

0772367407

தகவல்:
குடும்பத்தினர்.


## புதுவருட பஜனை

யாழ்ப்பாணம், டிசெ. 31

யாழ்ப்பாணம் சத்திய சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் புதுவருட விசேட பஜனை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் சேர் பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்திய சேவா நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் மருத்துவர் இ.கணேசமூர்த்தி புதுவருட சிறப்புரையை நிகழ்த்தவுள்ளார். (ம-14-66)





யாழ். மாவட்டச் செயலக நலன்புரி கழகத்தின் ஏற்பாட்டில், யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் ஒளிவிழா நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். (ச- 66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழர்களுக்கான தீர்வு விடயம்

# அனைத்து அரசியல்கைதிகளின் விடுதலையை உறுதிப்படுத்துக!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 31

தமிழர்களுக்கான தீர்வு விடயம் தொடர்பாக, தமிழ்த் தேசியக் கட்சிகள் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தவுள்ள நிலையில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை இந்தப் பேச்சின்போது உறுதிப்படுத்த வேண்டும் என்று 'குரல் அற்றவர்களின் குரல்' அமைப்பு வலியுறுத்தியுள்ளது.



தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு இது தொடர்பான மனுவொன்றையும் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கையளித்துள்ளது.

அந்த மனுவில் மேலும் உள்ளதாவது:-

மிகநீண்ட காலங்களாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 32 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் ஆளுக்கொரு கருத்தை நாளுக்கொரு வகையில் தெரிவித்து வருகிறார்கள். இது தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் மக்கள் மத்தியில் அதிருப்தியையும் நல்லிணக்கம் தொடர்பான சந்தேகத்தையும் எழுப்பியுள்ளது.

அந்தவகையில், அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்கும் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளும், நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு அடித்தளமிடுகின்ற புலம்பெயர் மக்கள் அல்லது அமைப்புக்களும் தமிழ்மக்கள் நலன் சார்ந்து வெகுநிதானமாகச் செயற்பட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த 13ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கட்சி தலைவர்களின் கலந்துரையாடலில், பேச்சுக்கு முன்னதாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளினுடைய விடுதலை உறுதி செய்யப்படுமென ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அதற்கு, ஏனைய சிங்களத் தலைவர்கள் எவரும் ஆட்சேபனைகளையோ எதிர்ப்புகளையோ வெளியிட்டிருக்கவில்லை.

இவ்வாறிருக்கையில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பொன்றில், 'விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 16 அரசியல் கைதிகளின் விடுதலை துரிதப்படுத்தப்படும்' என்ற புராணத்தையே நீதி அமைச்சர் கையிலெடுத்திருந்தார். தண்டனையை அனுபவிக்கும் 13 பேர் தொடர்பில் தீர்க்கமான கருத்துக்கள் எதையும் முன்வைக்கவில்லை.

குறைந்த பட்சம், எவ்வித எதிர்பார்ப்புக்களோ தடைகளோ இன்றி உடனடியாகவே நடைமுறைப்படுத்தக் கூடிய அரசியல்கைதிகளது விடுதலை விடயத்தில்கூட நழுவல் போக்கை கடைப்பிடிக்கின்ற ஆட்சியாளர்கள், வேறெதனைப் பேசித் தீர்க்கப் போகிறார்கள்? எனவே, பொருளாதார அரசியல் நெருக்கடியில் சிக்கியிருக்கும் அரசு, அதிலிருந்து தன்னை மீட்டெடுத்துக் கொள்வதற்கு உதட்டளவில் உச்சரிக்கும் நல்லிணக்கப் பொறிக்குள் தடுமாறி வீழ்ந்து மீண்டும் மீண்டும் ஏமாறவேண்டுமா? எனத் தமிழ்ப்பிரதிநிதிகள் நன்றாகச் சிந்தித்துச் செயலாற்றும் தருணமிது.

ஆகவே, தமிழ்ப் பிரதிநிதிகளும் புலம்பெயர் மக்களும் அரசுடனான இணக்கப் பேச்சுக்களில் தொடர்ந்து ஈடுபடுவதாயின் 32 தமிழ் அரசியல் கைதிகளையும் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் விடுதலை செய்யவேண்டும் என்பதை ஒருமித்த கருத்தாக முன்வைக்க வேண்டும் - என்றுள்ளது. (ம-27)



## கடற்றொழிலாளர் வாழ்வாதாரத்துக்கு கடலட்டைப்பண்ணைகள் வேண்டுமாம்

### இவ்வாறு வலியுறுத்திப் பேரணி

யாழ்ப்பாணம், டிசெ. 31

கடற்றொழில் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு கடலட்டைப்பண்ணைகள் வேண்டும் என்று தெரிவித்து யாழ்.கோட்டைப் பகுதியிலிருந்து யாழ். பேருந்துத் தரிப்பிடம் வரை பேரணியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

கடற்றொழில் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அட்டைப் பண்ணைகள் பெரிதும் உதவுகின்றன. தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடியில் நாட்டுக்கும் மக்களுக்கும் அந்நிய செலாவணியை பெற்றுக்கொடுக்கும் ஒரு தொழிலாக அட்டைப் பண்ணை காணப்படுகின்றது.

தமது குறுகிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, கடற்றொழில் மேற்கொள்ளாத சிலரும் அட்டைப்பண்ணையை விரும்பாத சிலரும் கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

அட்டைப் பண்ணைகளை அமைப்பதற்கு சங்கங்களின் விருப்பமும் பெறப்பட்டே உரிய திணைக்களங்கள் ஊடாக அளவீடு செய்யப்பட்டு அனுமதியுடன் பண்ணைகளை அமைத்துள்ளோம். அட்டைப் பண்ணைகள் வேண்டாம் எனக் கூறுவோர் ஏன் வேண்டாம்? என மீனவ சங்கங்களுடன் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கட்டும்.

யாழில் அட்டைப் பண்ணைகள் வேண்டுமென பலர் விண்ணப்பித்துள்ள நிலையில் துறைசார்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விரைவாகப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மீனவ சமூகம் நன்மை அடைகின்ற அட்டைப் பண்ணைகளை ஊக்கப்படுத்த வேண்டுமே தவிர தடுக்கக் கூடாது. என்றனர். (ம-14,27)

## ஆண்டு விழாவும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், டிசெ. 31

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நாவலரின் நூல்களின் கண்காட்சியும், நாவலர் நினைவு மலர் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் நாவலரின் தமிழ்ப் பணி தொடர்பில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் வேல் நந்தகுமாரும், நாவலரின் சமயப் பணி தொடர்பில் வலிகாமம் வலய ஆசிரிய வளவாளர் சைவப்புலவர் ச.முகுந்தனும், நாவலரின் சமூகப் பணி தொடர்பில் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் வே. ஞானசம்பந்தனும் சொற்பொழிவுகளை ஆற்றவுள்ளனர். (ம-14,66)




## நிபந்தனைகளை விதிக்காமல் பேச்சுக்குச் செல்லவேண்டாம்!

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் நேற்றுப் போராட்டம்

வவுனியா, டிசெ. 31

அரசாங்கத்துடனான பேச்சுக்களின் போது நிபந்தனைகள் எதையும் முன்வைக்காமல் செல்லவேண்டாம் என்று வலியுறுத்தி வவுனியாவில் நேற்று காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அரசாங்கத்துடனான பேச்சுக்களின்போது காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதியை நிலைநாட்டும் வகையில் செயற்பட வேண்டும். பொதுமக்களின் அபிலாசைகளுக்கு அமைய நிபந்தனைகளை முன்வைக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ம-110)



## முல்லை. கள்ளப்பாட்டில் மாற்றுத்திறனாளி நிகழ்வு

முல்லைத்தீவு, டிசெ. 31

முல்லைத்தீவு - கள்ளப்பாடு தெற்கில் நெய்தல் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு இடம்பெற்றது.

உதவும் கரங்கள் அமைப்பின் நிர்வாகி தி.தியாகேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது விசேட தேவையுடையோருக்கு உதவிப் பொருள்கள், மற்றும் உதவுதொகைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன், கிராமமட்ட பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடி + மக்கள் புரட்சி = ஆட்சி கவிழ்ப்பு

## ஜனவரி

01.01.2022 - தெற்காசியாவிலேயே அதிக பணவீக்கம் கொண்ட நாடாக இலங்கை அறிவிக்கப்பட்டது.

இலங்கையர்கள் வெளிநாட்டுப் பிரஜைகளைத் திருமணம் செய்வதாயின், பாதுகாப்புத் துறையின் சான்றிதழ்கள் பெறப்பட வேண்டும் என்பது கடும் எதிர்ப்புக்கு மத்தியில் சட்டமாக்கப்பட்டது.

02.01.2022 - முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு 'ஸ்ரீ லங்கா தீஸ்வர பத்மவிபூசண' விருது மகா சங்கத்தால் வழங்கப்பட்டது.

06.01.2022 - இந்தியப் பிரதமருக்கு ஒப்படைப்பதற்காக வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து பொதுநிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆவணத்தில் கைச்சாத்திட்டன.

இலங்கையில் கண்டறியப்பட்ட உலகின் மிகப்பெரிய நீல மாணிக்கக்கல்லான 'ஆசியாவின் ராணி'க்கு 100 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க முன்வந்தது டுபாய்.

09.01.2022 - காங்கேசன்துறை - கல்கிசை இடையே நகர்சேர் கடுகதி ரயில் சேவை ஆரம்பம்.

11.01.2022 - தெல்லிப்பழை பிரதேச செயலர் சிவஸ்ரீக்கு ஊழல் மற்றும் இலஞ்சமற்ற சிறந்த அரச சேவையாளருக்கான 'நேர்மைக்கு மகுடம்' விருது வழங்கப்பட்டது.

14.01.2022 விடுதலைப்புலிகளின் முக்கியமான ஆவணங்கள் சில முள்ளிவாய்க்காலில் மீட்பு

21.01.2022 - அரச ஊழியர் ஓய்வுபெறும் வயதெல்லை 65ஆக அதிகரித்து வர்த்தமானி வெளியிடப்பட்டது.










## பெப்ரவரி

01.02.2022 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள் மீதான அடக்குமுறைகளுக்கு நீதிகோரி யாழில் போராட்டம்.

02.02.2022 இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக்கோரி பருத்தித்துறை மீனவர்கள் தொடர் போராட்டம்.

உருமாறிய ஒமிக்ரோன் வைரஸ் தொற்று 57 நாடுகளில் பரவியுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு

05.02.2022 வலி.தென்மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட கல்லுண்டாய் வெளியில் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ நிலையத்துக்கு அடிக்கல் நடுகை செய்யப்பட்டது.

10.02.2022 எரிவாயு சிலிண்டர்கள் வெடித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க லிட்ரோ நிறுவனம் தீர்மானம்.

11.02.2022 வவுனியா பல்கலைக்கழகம் ஜனாதிபதி கோத்தாபயவால் திறக்கப்பட்டது.

12.02.2022 இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஜூலி சுங் பதவியேற்பு

12.02.2022 கோப் குழுவின் தலைவராகப் பேராசிரியர் சரித கேரத் மீண்டும் தெரிவு

16.02.2022 மூத்த பத்திரிகையாளர் எஸ்.டி.சிவநாயகத்தின் நினைவாக ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்பட்டது.

22.02.2022 புங்குடுதீவு, கேரதீவு இடையே 35 வருடங்களின் பின்னர் இ.போ.சவால் புதிய பேருந்து சேவை




## மார்ச்

03.03.2022 இலங்கை கால்பந்தாட்ட வீரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ் மாலைதீவில் மரணம்.

07.03.2022 தெற்காசியாவின் மிகப்பெரிய சிமெந்துத் தொழிற்சாலை அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மாகம்புர லங்கா கைத்தொழில் வலயத்தில் கோத்தாபய மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

09.03.2022 அத்தியாவசியமற்றவை என்று கருதப்பட்ட 367 பொருள்களின் இறக்குமதிக்குத் தடைவிதித்து அப்போதைய நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

12.03.2022 டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி மிக மோசமாக சரிவைப் பதிவுசெய்தது.

14.03.2022 வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா ஒரே தடவைக் கொடுப்பனவு மற்றும் இறப்புச் சான்றிதழை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

15.03.2022 ஆட்சி மாற்றம்கோரி தலைநகர் கொழும்பில் மக்கள் போராட்டம் வெடித்தது.

16.03.2022 சர்வதேச நாணய நிதியத்திடம் பொருளாதார உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

22.03.2022 பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ள நாடாளுமன்று அனுமதி வழங்கியது.

28032022 இலங்கை - இந்தியா நட்புறவின் சின்னமாக இந்திய அரசால் 1.6 பில்லியன் நிதியுதவியில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார நிலையம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கர் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

31.3.2022 நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோத்தாபயவின் வீடு மக்களால் முற்றுகையிடப்பட்டது.

## ஏப்ரல்

01.04.2022 - கொழும்பில் ஆர்ப்பாட்டக்காரர்களால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் வீடு முற்றுகையிடப்பட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

01.04.2022 - முன்னாள் அமைச்சர் அதாவுத செனவிரத்ன தனது 91ஆவது வயதில் காலமானார்.

03.04.2022 - கொழும்பில் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டம் வெற்றிபெற்றது. கூண்டோடு அமைச்சரவை பதவி விலகியது.

06.04.2022 - பெரும்பான்மையை இழந்தது அரசு

07.04.2022 - இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கலாநிதி நந்தலால் வீரசேகர பதவியேற்பு.

12.04.2022 - யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் உயிர் இரசாயனவியல் துறைத் தலைவருமான பேராசிரியர் எஸ்.பாலகுமார் மறைவு

17.04.2022 - காலியில் அமைக்கப்பட்டிருந்த கோத்தா கோ கம கூடாரங்கள் பொலிஸாரால் பலவந்தமாகப் பிடுங்கி எறிந்தமையினால் களேபரம் வெடித்தது.

23.04.2022 - இலங்கையில் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சர்வதேச நாணய நிதியம் உதவத் தயார் என்று அதன் இலங்கைத் தூதரகத் தலைவர் அறிவித்தார்.

29.04.2022 - அரசாங்கத்துக்கு எதிரான போராட்டக்காரர்களால் இலங்கையின் முன்னாள் பிரதமரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் உருவச் சிலையின் கண்கள் கறுப்புத்துணி கொண்டு கட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடி + மக்கள் புரட்சி = ஆட்சி கவிழ்ப்பு

# 2022



## மே

02.05.2022 - கொவிட் தடுப்பூசியின் மூன்று டோஸ்களையும் பெற்றிருக்க வேண்டும் என வெளியான வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்பட்டது.

03.05.2022 - பழம்பெரும் நடிகர் வில்சன் கருணாரத்ன 79ஆவது வயதில் மறைவு

07.05.2022 - இந்தியாவின் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் 'அசானி' புயல் உருவாகியது.

09.05.2022 - மஹிந்த ராஜபக்ச கூட்டிய அலரிமாளிகை கூட்டத்தைத் தொடர்ந்து அமைதிவழிப் போராட்டக்காரர்கள் மீது மஹிந்த ஆதரவுக் காடையர்களின் தாக்குதலையடுத்து தென்னிலங்கையில் பெரும் கலவரம் ஏற்பட்டது. 30 க்கு மேற்பட்ட அமைச்சர்களது வீடுகள் எரிக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட 4 பேர் உயிரிழந்தனர். மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியிலிருந்து விலகினார்.

10.05.2022 - நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து மஹிந்த ராஜபக்ச இராணுவப் பாதுகாப்புடன் அலரிமாளிகையிலிருந்து வெளியேறினார்.

12.05.2022 - இலங்கையின் 26ஆவது பிரதமராக ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்பு.

## ஜூன்

01.06.2022 இறக்குமதித் தடை விதிக்கப்பட்டிருந்த 369 வகையான அத்தியாவசியமற்ற பொருள்களுக்கான இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

03.06.2022 ஜெனரல் சவேந்திர சில்வா பாதுகாப்புப் படைகளின் பிரதானியாகப் பதவியேற்றார். மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே இலங்கை இராணுவத் தளபதியாகப் பதவியேற்றார்.

08.06.2022 மின்விநியோகம் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

09.06.2022 பஸில் ராஜபக்ச அமைச்சுப் பதவியைத் துறந்தார்.

11.06.2022 லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் பதவி விலகல்

13.06.2022 318 புலம்பெயர் தமிழர்களை தடைப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு மீளாய்வு என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அறிவித்தார்.

14.06.2022 லிட்ரோ நிறுவனத்தின் புதிய தலைவராக முதித பீரிஸ் நியமனம்.

## ஜூலை



01.07.2022 - தடுத்துவைக்கப்பட்டுள்ள போராளிகளை மறுவாழ்வுத் திட்டத்தில் விடுவிக்க 'ஒரேநாடு ஒரே சட்டம்' செயலணியால் ஜனாதிபதி கோத்தாபயவிடம் அறிக்கை கையளிப்பு.
இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக பணவீக்கம் 50 வீதத்தை எட்டியது.

03.07.2022 - மன்னார் திருக்கேதீச்சர ஆலய தீர்த்தக்கரையில் சிவன் சிலை, நாவலர் சிலை ஆகியன திறந்துவைப்பு

09.07.2022 - இலங்கை வரலாற்றில் முதற்றடவையாக மக்கள் புரட்சியால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச துரத்தப்பட்டார். மக்கள் புரட்சியின் விளைவாக ஜனதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றை மக்கள் கைப்பற்றினர்.

13.07.2022- மக்கள் கிளர்ச்சிக்கு அஞ்சி கோத்தாபய ராஜபக்ச நாட்டைவிட்டு தப்பியோடியதையடுத்து ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிப்பு.

14.07.2022 - மாலைதீவில் தலைமறைவான ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மின்னஞ்சல் மூலம் சபாநாயகரிடம் பதவி விலகல் கடிதத்தைக் கையளித்தார்.
குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய வளாகத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரை உள்ளிட்ட அனைத்துக் கட்டுமானங்களையும் அகற்றுமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு

20.07.2022- இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 134 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் பதவியேற்றார்.

21.07.2022- 100 நாள்களுக்கு மேலாக காலிமுகத்திடலில் அமைதியாகப் போராடியோர் மீது முப்படையினர் தாக்குதல்.

23.07.2022- கறுப்பு ஜூலை நிறைவுநாளில் இன அழிப்புக்கு எதிரான தமிழ்க்கூட்டமைப்பு உதயம்.

26.07.2022- எரிபொருள் விநியோகத்துக்காக கியூஆர் முறைமை நாட்டில் நடைமுறை.

30.07.2022 - அரசமைப்பின் 22ஆவது திருத்த வரைவுக்கான வர்த்தமானி வெளியிடப்பட்டது

31.07.2022- ரணில் தலைமையிலான சர்வகட்சி அரசாங்கத்துக்கு கூட்டமைப்பு ஆதரவு

## ஓகஸ்ட்

03.08.2022 யாழ். பல்கலையில் 3ஆவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு ஆரம்பம்.

12.08.2022 திருக்கேதீச்சர திருப்பணிச்சபைக்கு 'யாழ் விருது' கையளிப்பு

16.08.2022 யாழ்.பல்கலை அறிவியல் நகர் வளாகத்தில் முதலாவது பொறியியல் மாநாடு

24.08.2022 தமிழர்களின் உரிமைகளை வலியுறுத்தி மன்னாரில் போராட்டம்



## செப்ரெம்பர்

03.09.2022 மயிலிட்டி - பருத்தித்துறை வீதி 24 மணிநேரமும் மக்கள் பாவனைக்கு திறந்து வைப்பு

05.09.2022 வடக்கின் சுகாதாரப் பணிப்பாளராக லியனகே பொறுப்பேற்பு

08.09.2022 சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்ட வரைவின் இரண்டாம் வாசிப்பு 81 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.
சூரியசக்தி மூலமான மாற்றுவலுத் திட்டம் முல்லையில் ஆரம்பம்

10.09.2022 பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கக் கோரி கையெழுத்து வேட்டை ஆரம்பம்

14.09.2022 யாழ். பல்கலைக் கழகத்தில் விவசாயபீட 8ஆவது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது.

15.09.2022 விசேட தேவையுடையவர்களுக்கு பல்கலையில் நிலையம் திறந்து வைப்பு.

16.09.2022 அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக வடமாகாண ஆளுநர் செயலகம் முன் மக்கள் போராட்டம்.

23.09.2022 காணிகளை விடுவிக்குமாறுகோரி வலி. வடக்கில் போராட்டம்.

## ஒக்ரோபர்

01.10.2022- மூத்த பிரஜைகளுக்கு வழங்கப்பட்டு வந்த விசேட வட்டித் திட்டம் ரத்து.

02.10.2022 - வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை மாரடைப்பால் உயிரிழப்பு.

06.10.2022- நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காகவும், நீதியை நிலைநாட்டுவதற்காகவும், இறுதிப்போரில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்புச் சொல்வதற்காகவும் இலங்கைக்கு மீண்டுமொரு அவகாசத்தை வழங்கியது ஐக்கிய நாடுகள் சபை.

21.10.2022- 9 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை.

## நவம்பர்

03.11.2022 - காணாமல் ஆக்கப்பட்டோர் எவரும் உயிரோடு இல்லை என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவிப்பு

05.11.2022 - ஜனநாயகப் பொன்விருது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு வழங்கப்பட்டது.

07.11.2022 - இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் தனுஸ்க குணதிலக பாலியல் குற்றச்சாட்டில் அவுஸ்திரேலியாவில் கைதுசெய்யப்பட்டார்.

- 303 தமிழர்களுடன் பயணித்த படகு நடுக்கடலில் தத்தளித்த நிலையில் மீட்கப்பட்டு, வியட் நாம் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

11.11.2022 தமிழர் பிரச்சினைக்கு சுதந்திர தினத்துக்குள் தீர்வு என ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு.

13.11.2022 முன்னாள் போராளிகள் நலன்புரிச் சங்கம் உதயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிசெம்பர்

07.12.2022 - வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகளுக்கு விதிக்கப்பட்ட கொவிட் விதிமுறை தளர்வு

காற்று தரக் கண்காணிப்பு நிலையம் யாழ். மாவட்டத்தில் திறந்து வைப்பு

08.12.2022- நாவற்குழி நுழைவாயிலில் ஏழு அடி உயரமான சிவபெருமான் சிலை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

10.12.2022 - ஆசியத்தூதுவர்கள் யாழ்ப்பாணம் வருகை

12.12.2022 - பலாலி சர்வதேச விமான நிலையம் மீண்டும் இயங்க ஆரம்பித்தது.

15.12.2022 - இலங்கையில் தனிநபர் ஒருவரின் கடன்சுமை 11 லட்சம் ரூபாவை தாண்டியுள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு.

16.12.2022 - இலங்கையின் தேசிய மலர் நீலோற்பலமா? அல்லியா? ஆராய நிபுணர்குழு நியமிப்பு.

16.12.2022 - இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவரான எழிலனை முன்னிலைப்படுத்துமாறு வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவு.

15.12.2022 - ஜனசக்தி குழுமத் தலைவரும் பிரபல வர்த்தகருமான தினேஷ் சாப்டர் கொடூரக்கொலை.

18.12.2022 - மியான்மரிலிருந்து படகில் வந்த ஏதிலிகள் 104 பேர் வடமராட்சிக் கடற்பரப்பில் மீட்பு.

19.12.2022 - கொழும்பு துறைமுக நகருக்கு புதிய விசா அறிமுகம்.

27.12.2022- அரச விடுமுறைகள் அதிகம் வழங்கப்பட்ட நாடுகளில் இலங்கை நான்காம் இடத்தில் பட்டியலிடப்பட்டது.



## விளையாட்டு




**30.01.2022**

5 மணித்தியாலங்கள் 25 நிமிடங்கள் இடம் பெற்ற அவுஸ்திரேலியப் பகிரங்கத் தொடரின் இறுதியாட்டத்தில் நடால் கிண்ணம் வென்றார்.

**05.06.2022**

பிரெஞ் பகிரங்கத் தொடரில் கிண்ணம் வென்றார் நடால். இதையடுத்து பிரெஞ்சுப் பகிரங்கத் தொடரை மட்டும் அவர் 14ஆவது தடவையாகக் கைப்பற்றினார். இது ஓர் உலக சாதனையாகும்.



**10.07.2022**

விம்பிள்டன் பகிரங்கத் தொடரில் கிண்ணம் வென்றார் ஜோகோவிக்.



**11.09.2022**

அமெரிக்கப் பகிரங்கத் தொடரின் இறுதியாட்டத்தில் கிண்ணம் வென்றார் கார்லொஸ் அர்கிராஸ்.

**11.09.2022** ஆசியக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி கிண்ணம் வென்றது இலங்கை அணி.





**13.11.2022**

ரி20 உலகக்கிண்ணத் தொடரில் சம்பியனானது இங்கிலாந்து.

**18.12.2022**

கால்பந்தாட்ட உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் பிரான்ஸை வீழ்த்தி கிண்ணம் வென்றது ஆர்ஜென்ரீனா.



**30.12.2022**

கால்பந்தாட்ட உலகின் முடிசூடா மன்னன் பிரேஸிலில் தங்கமகன் பீலே உயிரிழப்பு

## இந்தியா 2022

**7.01.2022**

இந்தியாவில் கொரோனாத் தொற்றுக்காக கொரோனா மாத்திரை அறிமுகம்

ஒமிக்ரோனால் முதல் உயிரிழப்பு பதிவு



**18.05.2022**

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் பேரறிவாளன் இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.



**12.07.2022**

அ.தி.மு.க. இடைக்காலப் பொதுச்செயலராக எடப்பாடி பழனிச்சாமி தெரிவு



**15.07.2022**

திரௌபதி முர்மு இந்தியாவின் 15ஆவது குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார்.

**28.07.2022**

சென்னையில் 44ஆவது சதுரங்க ஒலிம்பியாடு போட்டியை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைத்தார்.

**11.11.2022**

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கிலிருந்து நளினி, முருகன், சாந்தன், ரவிச்சந்திரன், ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ் ஆகிய அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.



**11.08.2022**

இந்தியாவின் 14ஆவது குடியரசுத் துணைத் தலைவராக ஜகதீப் தன்கர் பதவியேற்றார்.







14.12.2022 - தமிழக விளையாட்டுத்துறை அமைச்சராக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் மகன் உதயநிதி ஸ்டாலின் பதவியேற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல் அரங்கில் 2022ஆம் ஆண்டு பல்வேறு பதிவுகளைத் தந்துள்ள ஆண்டாகவே பதிவாகி மறைந்திருக்கின்றது. கடந்த வருடத்தில் இடம்பெற்ற முக்கியமான சம்பவங்களின் தொகுப்பே இது.







## உக்ரைன் - ரஷ்ய மோதல்

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்ட நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதியன்று ஆரம்பித்தது ரஷ்யா. சுமார் 10 மாதங்கள் கடந்த பின்னரும் இந்தப் போர் இன்னமும் முற்றுப்பெறாமல் தொடர்ந்தே செல்கின்றது.

## 61 ஆண்டுகளுக்கு பிறகு...

பாட்ரிஸ் லுமும்பா. ஆபிரிக்கவின் விடுதலை வரலாற்று நாயகர்களில் மறுக்க முடியாத பெயர். கொங்கோ ஐரோப்பாவின் காலனியாக இருந்ததை பாட்ரிஸ் ஒருபோதும் விரும்பியதே இல்லை. கொங்கோ விடுபட்டு சுதந்திரமாக இருக்கவேண்டும் என்று விரும்பினார். இந்தச் சூழலில் 1960ஆம் ஆண்டு கொங்கோ குடியரசாக அறிவிக்கப்பட்டது. ஜனநாயக முறையில் நாட்டின் பிரதமராக பாட்ரிஸ் லுமும்பா பதவியேற்றார். பெல்ஜியம் கொங்கோவுடன் ஏற்படுத்தப்பட்ட நட்பு உடன்படிக்கையையும் அவர் ரத்து செய்தார்.

பாட்ரிஸின் இந்த நடவடிக்கை பெல்ஜியத்தை கோபமடையச் செய்தது. இதனைத் தொடர்ந்துதான் வரலாற்றில் மன்னிக்க முடியாத குற்றத்துக்கு பெல்ஜியம் தன்னை உடன்படுத்திக் கொண்டது. அரசின் சொத்துகளை பாட்ரிஸ் சட்டத்துக்கு புறமாக பயன்படுத்திக்கொண்டார் என்று போலியான குற்றம் சுமத்தப்பட்டு அவரது ஆட்சி கலைக்கப்பட்டது. இந்த ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னணியில் பெல்ஜியம் இருந்தது. பாட்ரிஸ் கைதுசெய்யப்பட்டார். 1961ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் திகதி கொங்கோ பாதுகாப்புப் படையால் பாட்ரிஸ் சுட்டுக்கொல்லப்பட்டார். பாட்ரிஸின் உடலுறுப்பில் தங்கத்தினாலான அவரது ஒரேயொரு பல் மட்டுமே மிச்சம் இருந்தது. பாட்ரிஸின் இந்த மரணம் மனித இன வரலாற்றில் மிகக் கொடூரமான வன்முறையாக கருதப்பட்டது. இந்த நிலையில், 61 ஆண்டுகளுக்குப் பிறகு பாட்ரிஸின் பல்லை இராணுவ மரியாதையுடன் பெல்ஜியம் இந்த ஆண்டு ஜூன் மாதம் கொங்கோவிடம் ஒப்படைத்தது.

## சவூதியின் மரண தண்டனை

பொதுவாகவே மத்திய கிழக்கு நாடுகளில் தூக்குத் தண்டனைகள் இன்றளவும் நடைமுறையில் இருப்பதற்குக் கடும் கண்டனங்கள் எழுந்துவரும் நிலையில், கடந்த வருடம் மார்ச் மாதம் 12ஆம் திகதி 81 பேருக்கு (ஒரே நாளில்) தூக்குத் தண்டனையை நிறைவேற்றியது சவூதி. இது சர்வதேச அரங்கிலும், சமூக ஆர்வலர்களிடமும் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியது.

## ஹிஜாப் எதிர்ப்புப் போர்

ஈரானில் கட்டாய ஹிஜாப்புக்கு எதிராக அந்த நாட்டு இளம்பெண்கள் மற்றும் இளைஞர்களின் போராட்டம்தான் இந்த் ஆண்டு கவனிக்கத்தக்க போராட்டமாக மாறியது.

மாஷா அமினி என்ற இளம்பெண் கண்காணிப்பு காவலர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்தார். இவரது இறப்பு ஈரானில் ஹிஜாப்புக்கு எதிராக மாபெரும் கிளர்ச்சி ஏற்பட வழிவகுத்தது. ஈரானில் செப்ரெம்பர் மாதம் தொடங்கிய இந்தக் கிளர்ச்சி மூன்று மாதங்களாகத் தொடர்ந்தது.

இதில் 300க்கும் அதிகமானவர்கள் ஈரான் இராணுவத்தால் கொல்லப்பட்டனர். 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டனர். போராட்டத்தில் கலந்துகொண்டு பெண்களின் நலனுக்காக குரல் கொடுத்த ஈரான் கால்பந்தாட்ட வீரர் அமீர் நசீர் உள்ளிட்ட 20க்கும் அதிகமானவர் 'கடவுளுக்கு எதிரான போர்' என்ற குற்றச்சாட்டில் ஈரான் தூக்குத் தண்டனை அறிவித்தது.

## புலம்பெயரிகளின் கொலை

ஆபிரிக்க நாடான மொரோக்கோவிலிருந்து ஸ்பெய்னுக்குச் செல்ல முயன்ற 2 ஆயிரத்துக்கும் அதிகமான ஆபிரிக்கர்கள் மீது மொராக்கோ ஸ்பெய்ன் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 20க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். இந்தக் கண்மூடித்தனமான, மனிதத் தன்மையற்ற தாக்குதல்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி ஸ்பெய்ன் அரசின் மீது கடும் விமர்சனங்கள் வைக்கக் காரணமாகின.

## பிரிட்டன் மகாராணி எலிசபெத் மறைவு



70 ஆண்டுகள் அரியணையை அலங்கரித்த இங்கிலாந்து ராணி எலிசபெத் தனது 96ஆவது வயதில் செப்ரெம்பர் 8 இல் காலமானார். அவரது மறைவுக்கு உலக நாடுகள் பலவும் துக்கம் அனுஷ்டித்தன. தொடர்ந்து புதிய அரசராக மூன்றாம் சார்லஸ் அதிகாரபூர்வமாகப் பதவியேற்றார்



## இஸ்ரேலின் ஊடகப்படுகொலை

கடந்த மார்ச் முதலாம் திகதியன்று முகமது நபிகள் விண்ணேற்றத்தைக் குறிக்கும் நாளன்று, கிழக்கு ஜெருசலேமில் டமாஸ்கட் கேட் பகுதியில் ஒன்றுகூடியிருந்த பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேலின் இராணுவத்தினர் நடத்திய கடும் தாக்குதலில் பல பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேல் இராணுவத்தின் அத்துமீறலை தொடர்ந்து செய்திகளாக உலகுக்குக் கொண்டு வந்த அல்ஜசீரா பத்திரிகையாளர் ஷிரீன் அபு அக்லே, இஸ்ரேல் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலை உலக அரங்கில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

## கருக்கலைப்புத் தீர்ப்பு

அமெரிக்காவில் கருக்கலைப்புக்கு எதிரான அந்த நாட்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு, அங்கு மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலும் எதிர்ப்புகள் கிளம்பின. கருக்கலைப்புக்கு எதிரான நீதிமன்றத்தின் தீர்ப்பு, அமெரிக்காவை 150 வருடங்கள் பின்னால் அழைத்துச் சென்றுவிட்டது என்ற விமர்சனக் குரல்கள் வலுவாக ஒலிக்கத் தொடங்கின.



## ஷின்சோ அபே கொலை

ஜப்பானின் முன்னாள் பிரதமரும் ஆசியாவின் சிறந்த ஆளுமைகளில் ஒருவருமாகக் கருதப்படும் ஷின்சோ அபே கடந்த வருடம் ஜூலை 8ஆம் திகதி, தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைநலன் பாராட்டு

எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி
இன்று (31.12.2022) சேவையிலிருந்து ஓய்வுபெறும்

### திரு. எஸ்.ஆர். மகேந்திரன்

(விசேட பயிற்சி சித்திரம் - SLTS - I)



அவர்கள் தமது
ஒய்வுகாலத்தில் சகல
நலன்களும் பெற்று
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்

Congratulations

சேவையாளர் சங்கம்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

(cs.43302) (2.6)

## சேவைநலன் பாராட்டு

எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி
இன்று (31.12.2022) சேவையிலிருந்து ஓய்வுபெறும்

### திருமதி பவளமலர் பிரபாஸ்கரன்

(விசேட பயிற்சி தமிழ் - B.A., PGDE, S.L.T.S. I)



அவர்கள் தமது
ஒய்வுகாலத்தில் சகல
நலன்களும் பெற்று
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்

Congratulations

சேவையாளர் சங்கம்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

(cs.43302) (2.6)




# இந்திய கிரிக்கெட் வீரர் ரிஷப் பன்ட் படுகாயம்!

**தீப்பற்றி எரிந்த காரிலிருந்து தெய்வாதீனமாக உயிர்தப்பினார்**

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் ரிஷப் பன்ட், கார் விபத்தில் படுகாயமடைந்தார். விபத்தை அடுத்து அவர் பயணித்த கார் முற்றுமுழுவதுமாக எரிந்த நிலையில், அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். தனது தாயாரைச் சந்திப்பதற்காக டெல்லியில் இருந்து உத்தரகாண்டுக்குச் சென்றபோதே அவர் கார் விபத்தில் சிக்கினார். இதையடுத்து நெற்றி, முதுகு, கால்களில் பன்ட்டுக்குப் படுகாயங்களும் சிராய்ப்புக் காயங்களும் ஏற்பட்டது. முதலாவது பரிசோதனையின்போது பன்ட்டுக்கு எலும்பு உடைவுகள் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. 'ரிஷப் பன்ட்டுக்குத் தேவையான உச்சக்கட்ட மருத்துவ உதவிகள் வழங்கப்படும்' என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

(ம)


## 04.07.2022 இல் மணிவிழாக்கண்டு

இன்றைய தினம் ஓய்வுபெறும்

### திருமதி சீதாதேவி இந்திரன்

பிறந்த திகதி : 04.07.1962



**சேவைக்காலம்:**

1. யா/ மிருசுவில் றோ.க.த.பாடசாலை 28.02.1989 - 01.02.1993
2. யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 02.02.1993 - 31.12.1994
3. யா/ அல்லாரை அ.தமிழ் வித்தியாலயம் 02.02.1995 - 01.02.2015
4. யா/ கச்சாய் மகா வித்தியாலயம் 02.02.2015 - 31.12.2022

Congratulations

31.12.2022 இல் ஓய்வுபெறும் இவ்வாசிரியரைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/ கச்சாய் மகாவித்தியாலயம்

(cr. 38898) (2.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு. இராஜப்பு பாஸ்கரன்

(பாதுகாப்பு உத்தியோகத்தர் - விசேட தரம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு
திணைக்களத்தில் கடந்த 33 வருடங்களுக்கு
மேலாக கடமையாற்றி இன்று (31.12.2022)
சனிக்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும்
திரு. இராஜப்பு பாஸ்கரன் அவர்கள் எமது
நலன்புரிச் சங்கத்தில் முன்னோடிகளில் ஒருவராகவும்
எமது திணைக்களத்தின் உயர்வுகளுக்காக
அரும்பாடுபட்ட இவரை பாராட்டி வாழ்த்துவதில்
பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.
இவரின் ஓய்வுகாலம் சிறக்க எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.



Congratulations

வாழ்த்துவோர்:
பாதுகாப்பு உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## சேவைநலன் பாராட்டு

எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி
இன்று (31.12.2022) சேவையிலிருந்து ஓய்வுபெறும்

### திரு. வைரமுத்து நாகநாதன்

(B.A., S.L.T.S. I)



அவர்கள் தமது
ஒய்வுகாலத்தில் சகல
நலன்களும் பெற்று
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்

Congratulations

சேவையாளர் சங்கம்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

(cs.43302) (2.6)

## சேவை நிறைவில் வாழ்த்துகின்றோம்



Best Wishes

### கந்தசாமி நித்தியானந்தன்

(அதிபர் - யா/ புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை)

- 20.01.1989 தொடக்கம் 04.07.2006 வரை - ஆசிரியர்
- 05.07.2006 தொடக்கம் 31.12.2022 வரை - அதிபர்

சீரிய கல்விப் பணி சிறப்புற ஆற்றிய நண்பா!
வாழிய இப்புவியில் வளம் பல மேலும் பெற்று
நேரிய நின் சிந்தனையும் நெறி தவறா வாழ்வியலும்
விவசாய நேசிப்பும் விரும்பும் நண்பர் கூட்டமும்
இன்று உனக்கு பணி ஓய்வா? இல்லை என்கின்றன
உன் தோட்டமும் வயலும்...
பாச மனைவி, நேச மகள், பிரிய நண்பருடன்
மகிழ்ந்தே பல்லாண்டு வாழ்க
வாழ்க எம் நண்பா நித்தி நீள் பல்லாண்டு

Congratulations Congratulations

1982 - 1986 யாழ். பல்கலைக்கழக நண்பர்களுடன்
த. மகிழ்ச்சிகரன், சி.ஞானசேகரம்
கி. சண்முகராஜா, மா. திருலிங்கம்

22602(2.6)

## சேவைநலன் பாராட்டு

கடந்த 30.08.2022 அன்று மணிவிழா கண்ட
எமது கல்லூரி ஆசிரியர்

### தம்பையா ஆனந்தவடிவேல்

அவர்கள் இன்று (31.12.2022) சனிக்கிழமை
சேவையில் இருந்து ஓய்வுபெறுகின்றார்.



**சேவைக்காலம்:**

1. யா/ போக்கட்டி அ.த.க. பாடசாலை 23.03.1990 - 05.01.2003
2. யா/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 06.01.2003 - 12.01.2005
3. மன் /இலுப்பைகடவை ம.வி 13.01.2005 - 05.08.2017
4. யா/ எழுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை 06.08.2017 - 07.04.2020
5. யா/ எழுமட்டுவாழ் ஸ்ரீகணேச வித்தியாலயம் 08.04.2020 - 31.12.2022

Congratulations

இவர் ஓய்வு காலத்தில் நோய்நொடி இன்றி சுகதேகியாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம்

(cr. 38898) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



Best Wishes

Congratulations

அகவை அறுபதில் சேவை நிறைவு காணும்
எமது கல்லூரியின் ஆங்கில பாட ஆசிரியையும்,
பகுதித் தலைவருமான
திருமதி **வான்மதி சத்தியலோகநாதன்** (SLTS - I)
அவர்களை வாழ்த்துகின்றோம்

சேவைக்காலம்

- யா/ பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் - 26.03.1990 - 16.01.2014
- யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி - 17.01.2014 - 31.12.2022

மணிவிழா நாயகியே
வித்தை புகட்டும் சேவையே
வாழ்வின் உன்னத பணியென
காலடி வைத்து கடமை புரிந்து
ஆங்கிலமொழியை அன்பாய் ஊட்டி
சேவையில் நிறைவுகாணும் வித்தகியே
ஓய்வுக் காலம் ஒளிமயமாய் சிறக்க
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

**யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**

cs 408092(2.6)

## மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள்தேவை

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப்பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது. தங்குமிட வசதி உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : **077 706 7698**

(CR 38810)(3/6)



**கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை உரிமையாளர் - நல்லையா உதயகுமார் (பெரியதம்பி) கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இரண்டாம் (2) இலக்க கடையில் இயங்குகின்றது** என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**ஆரம்பம்: 01.01.2023**

**தொ.பே.: 077 085 6479**

(cs.22482) (2.6)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
19 . 11 . 1997



இறைவன் அடியில்
31 . 12 . 2019

**அமரர் அமிர்தகுலசிங்கம் நிரோஜன்**

திதி: வளர்பிறை ஷஷ்டி (28.12.2022)

ஆண்டு மூன்று கடந்தது மகனே
இம் மண்ணை விட்டு நீ பிரிந்து!
தீராத துயரத்தில் தேம்புகின்றோம் நாம் இங்கு

உறவுகளை தவிக்கவிட்டு இமைகளை மூடிவிட்டாய்!
எம்மையெல்லாம் அழவிட்டு இறைவனடி நாடிவிட்டாய்!
நீ மறைந்த நாள் முதலால் நிம்மதி எமக்கு இல்லை மகனே!
நினைவிழந்து செயலிழந்து நிற்கதியாய் நிற்கின்றோம்
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

கோயில் வாசல்
இணுவில் மேற்கு, இணுவில்.
31.12.2022

உனது பிரிவால் வாடும்
அப்பா, அம்மா. அக்கா அண்ணா,
அத்தான் மற்றும் உறவினர்கள்.

(CS48362) (2.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றிநவிலலும்

பிறப்பு
19 . 03 . 1948



இறப்பு
01 . 12 . 2022

கடந்த (01.12.2022) அன்று இறைபதடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர் திரு. நாகலிங்கம் நடனபாதம்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 29.12.2022 வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றதுடன். அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (31.12.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும். தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும். மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாக மனமுவந்து ஏற்றுக்கொள்ளவும்)**

மேலும் அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியினூடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு. வெளிநாட்டு உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும். பதாகைகள், மலர்வளையங்கள். கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள். மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும். இன்றுவரை எமக்கு பல வழிகளில் உதவிபுரிந்த நல் உள்ளங்களுக்கும் அன்னாரின் நினைவுமலருக்கு அனுதாபச் செய்திகள் வழங்கிய நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"துவாரகை"
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.

## சேவைநலன் பாராட்டு



திரு. சின்னத்துரை
**இராஜசிவம்**

Congratulations



திரு. சுப்பிரமணியம்
**ஸ்ரீஸ்கந்தராஜா**

**வட்டுக்கோட்டை மின்பாவனையாளர் சேவை நிலையத்தில் கடமையாற்றி இன்றுடன் (31.12.2022) சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச்செல்லும்**
எமது சக ஊழியர்கள் திரு.சி. இராஜசிவம் (பாவனையாளர் ஒருங்கிணைப்பாளர்) மற்றும் திரு. சி. ஸ்ரீஸ்கந்தராஜா (பயிற்றப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் சிறப்பான சேவையைப் பாராட்டுவதோடு இவர்களின் ஓய்வுகாலம் சிறக்கவும் இறைவனருளால் நோயற்ற வாழ்வு வாழவும் வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர் :
**மின் அத்தியட்சகர், சக ஊழியர்கள்,
மின் பாவனையாளர் சேவை நிலையம்,
இலங்கை மின்சார சபை, வட்டுக்கோட்டை.**

(cs.21268) (2.6)

### மீண்டும் நேதன்யாகு

இஸ்ரேலின் பிரதமராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் நேதன்யாகு. இஸ்ரேலில் கடந்த மாதம் பொதுத் தேர்தல் நடந்தது. இது அங்கு 4 ஆண்டுகளில் நடந்த 5 ஆவது பொதுத் தேர்தல் ஆகும். இந்தத் தேர்தலில் பெஞ்சமின் நேதன்யாகுவுக்கும் யாயிர் லாபிட் இடையேயும் நேரடி போட்டி நிலவியது. இந்த நிலையில் நேதன்யாகு தலைமையிலான வலதுசாரி கூட்டணி 64 இடங்களைப் பிடித்து ஆட்சி அமைத் துள்ளது. எதிர்த்து போட்டியிட்ட கூட்டணி 51 இடங்களை மட்டுமே பெற்றது. நேதன்யாகுவின் லிகுட் கட்சி சுமார் 32 இடங்களை கைப்பற்றி தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைய வழியில் வருகை மற்றும் புறப்பாடு அட்டைகள்!

கொழும்பு, டிசெ. 31

வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பயணிகள் நாளை முதல் வருகை மற்றும் புறப்பாடு அட்டைகளை இணையம் ஊடாக பூர்த்தி செய்வதற்கான வசதிகளை குடிவரவுத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி, இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கான வருகை அட்டைகள் மற்றும் நாட்டை விட்டு வெளியேறும் இலங்கையர்களின் புறப்பாடு அட்டைகள் புதிய முறையின் மூலம் சரிபார்க்கப்படும்.

எனவே, பயணிகள் தங்கள் பயணத்துக்கு மூன்று நாள்களுக்கு முன்பு அட்டைகளை இணையம் ஊடாக நிரப்ப முடியும்.

www.immigration.gov.lk அல்லது https://eservices.immigration.gov.lk என்ற திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாகப் பார்வையிடுமாறு தெரிவித்துள்ளது.

இதன்மூலம், பயணிகள் குடிவரவு மற்றும் குடியகல்வு நடைமுறைகளை எந்தவித அசௌகரியமும் இன்றி நிறைவு செய்ய முடியும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ஒ-இ)

## யாழ்...

யாழ். மாநகரசபை மேயர் வி.மணிவண்ணன் இன்று நள்ளிரவு முதல் பதவி விலகவுள்ள நிலையில் மாநகரசபையின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் அவரிடம் 'உதயன்' பத்திரிகை எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'மாநகரசபைக் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக மேயர் தெரிவை இனி நடத்த முடியாது. சபையைக் கலைப்பது தொடர்பில் நான் தீர்மானம் எடுக்கமுடியாது. அது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படும். கிழக்கு மாகாணத்திலும் இவ்வாறான நிலைமை காணப்படுகின்றது. கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ள நிலையில் இன்னமும் அங்கும் பதில் கிடைக்கவில்லை' என்று உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் குறிப்பிட்டார்.

இதனால் யாழ். மாநகரசபையை யார் நிர்வகிக்கப்போகின்றனர் என்ற குழப்பங்கள் எழுந்துள்ளன. மாநகரசபைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் உள்ள நிலையில், ஆணையாளரின் அல்லது உள்ளூராட்சி ஆணையாளரின் கீழ் நிர்வாகம் முன்னெடுக்கப்படுவதற்கான சாத்தியங்களும் இல்லை.

இதேவேளை எதிர்வரும் மார்ச் மாதம் 19 ஆம் திகதியுடன் இலங்கையின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களினதும் பதவிக் காலங்கள் முடிவுக்கு வருகின்றன. அதற்கு முன்னதாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்பட்டால், சபைகளின் பதவிக் காலங்கள் ஜனவரி மாதத்துடன் முடிவுறும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5-125)

## புதிய...

வரவு - செலவுத் திட்டத்தை மீளச் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு இருந்தபோதும் அவர் இன்று நள்ளிரவு முதல் பதவி விலகுவதாக நேற்றையதினம் கடிதம் மூலம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

'வரவு - செலவுத் திட்டம் மீளவும் சமர்ப்பிக்கப்பட்டால் தோற்கடிக்கப்படும் என்பதால் பதவியைத் துறக்கிறேன்' என்று மணிவண்ணன் தெரிவித்தார்.

இதேவேளை - புதிய மேயருக்கான தெரிவு இடம்பெறுமாக இருந்தால், அதற்கு எதிராக நீதிமன்றதை நாடுவோம் என்று மணிவண்ணன் தரப்பினர் தெரிவித்தனர். ஏற்கனவே (ஆனோல்ட் மேயராக இருந்த காலத்தில்) இரண்டு தடவைகள் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒரு தடவை தோற்கடிக்கப்பட்டுள்ளது. எனவே மாநகரசபைக் கட்டளைச் சட்டங்களுக்கு அமைவாக, சபை கலைக்கப்படவேண்டும். அதற்கு முரணாக மேயர் தெரிவை நடத்த முயன்றால் நீதிமன்றத்தை நாடுவோம் - என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ-ஒ-5-26)

## வாகன...

திகதி முதல் பாதியாகக் குறைக்கவும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

படிவத்தின் விவரங்களில் சிக்கலான தன்மை மற்றும் கடதாசியின் விலையை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார். இதன்படி, தற்போதுள்ள 13 பக்கங்கள் 6 பக்கங்களாக குறைக்கப்படவுள்ளன. (அ-ஒ-ச-இ)

## உ.கிழங்கு...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெரிய வெங்காயம், சிறியதினை, இஞ்சி, உருளைக்கிழங்கு உற்பத்திகளை மேற்கொள்ளும் விவசாயிகள் கடந்த மாதம் நிலவிய காலநிலை மாற்றம் மற்றும் பெரிய வெங்காயத்தின் விதைக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டின் காரணமாக அதனை செய்கை பண்ணவில்லை. விதைகள் கிடைக்கப்பெற்றமையைத் தொடர்ந்தும், காலநிலையின் சாதகமான நிலைமையாலும் அந்த உற்பத்திகளை மீளவும் விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்குமுகமாக விவசாய அமைச்சின் நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் அவர்களுடைய உற்பத்திக்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு நிதியுதவியை வழங்குவதோடு உருளைக்கிழங்கு உற்பத்திக்கான விதைகளும் வழங்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ஒ-125)

## தவறி...

கூலி வேலையில் ஈடுபடும் அவர், நேற்று வெள்ளிக்கிழமை மதியம் வேலை முடிந்து வந்து குளிப்பதற்காக கிணற்றடிக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் உறவினர் முறையான இன்னொரு பெண் அந்தக் கிணற்றில் குளிக்கச் சென்றபோது மேற்படி பெண் கிணற்று நீரில் மிதந்த நிலையில் காணப்பட்டார். இதனைத் தொடர்ந்து உறவினர்கள் கிணற்றிலிருந்து மீட்ட போது அவர் உயிரிழந்த விடயம் தெரிய வந்தது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பருத்தித்துறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-ஒ-26)

## தமிழ்த்...

கொள்ளும் என்றும் வெளியில் உள்ள ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதில்லை என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பில் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவிடம் கேட்டபோது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தற்போதுள்ள கட்சிகளைத் (தமிழரசு, ரெலோ, புளொட்) வேறு கட்சிகளுடன் தேர்தல் உடன்பாட்டுக்குச் செல்வதில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு முடிவு எதுவும் எடுக்கவில்லை. அந்தக் கூட்டத்தில் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது, இது தொடர்பில் மற்றக் கட்சிகளுடன் எவ்வாறு பேசவேண்டும் என்பது குறித்து கருத்துப் பரிமாற்றங்கள் மாத்திரமே இடம்பெற்றன. சூம் செயலி ஊடாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பங்கேற்றுவிட்டு இடைநடுவில் சென்றுவிட்டார். தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது தொடர்பில் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்தான் முடிவு எடுப்போம்.

தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாகத் தனித்துப் போட்டியிடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே போட்டியிடும். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளைத் (தமிழ் அரசு, ரெலோ, புளொட்) தவிர வெளியில் உள்ள ஏனைய மூன்று கட்சிகளையும் (சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ்., என்.ஸ்ரீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி) இணைத்துக்கொண்டு தேர்தலைச் சந்திப்பதா என்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்தான் முடிவு எடுப்போம்.

இந்த விவகாரம் தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோர் என்னை வந்து சந்தித்துப் பேசியுள்ளார்கள். அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இந்த விவகாரம் தொடர்பில் என்னுடன் வந்து பேசியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனின் வீட்டில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் சந்திப்பின் போதும் தேர்தல் உடன்பாடு தொடர்பில் பேசியுள்ளோம். எனினும், தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்தான் தேர்தல் உடன்பாடு தொடர்பில் முடிவு எடுப்போம் என்று மேற்படி மூன்று சந்திப்புக்களிலும் நான் திட்டவட்டமாகத் தெரிவித்தேன். இந்த விவகாரத்தை நாம் மிகவும் பக்குவமாகக் கையாளவேண்டும். அவசரப்பட்டு கருத்துக்களை எவரும் வெளியிடக்கூடாது' - என்றார்.

இதேவேளை அரசியல் குழு உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி. தவராசா இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தவாறான தீர்மானம் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை. அரசியல் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் சகலரும் தங்களுடைய கருத்துக்களை முன்வைத்தார்கள். இறுதித் தீர்மானத்தை எதிர்வரும் 7 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மத்திய குழு கூட்டத்தில் கலந்துரையாடி எடுப்பதாகவும் அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு கலந்துரையாடி இறுதி முடிவு எடுப்பதாகவுமே தீர்மானிக்கப்பட்டது. எந்தச் சூழ்நிலையிலும் மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளை தேர்தலில் கூட்டணியாக உள்வாங்குவதில்லை என்ற முடிவு சூம் முறையில் நடத்தப்பட்ட அரசியல் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை.

சூம் முறையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பத்து, பதினைந்து நிமிடங்களில் தனக்கு வேறு ஒரு கூட்டம் உள்ளதாகக் கூறிச் சென்றுவிட்டார். அதன் பின்னர் கூட்டம் முடியும் வரை அவர் கலந்துகொள்ளவில்லை. உண்மைக்கு புறம்பான ஓர் அறிக்கையை பொறுப்புள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடகங்களுக்கு வேண்டுமென்றே தெரிவித்திருப்பது கவலைக்குரியதாகும் - என்றார். (அ-ஒ-5-22)

## யாழ்ப்பாணத்தில்...

நிகழ்வு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று பி.ப. 1.30 மணிக்கு நடைபெற்றது. அவரது பாரியார் சகிதம் அவர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். நிகழ்வில் அவருக்குப் பொன்னாடை அணிவிக்கப்பட்டு, நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

மாவட்டச் செயலர் உரையாற்றுகையில், பல்வேறு பகுதிகளிலிருந்து மாற்றலாகி வருகின்ற மாவட்டச் செயலர்கள் தற்துணிவோடும், தன்னம்பிக்கையுடனும் செயற்பட்டு வந்துள்ளனர். எனக்கும் இந்த மூன்று வருடங்களும் யாழில் சேவையாற்ற கிடைத்தமை பல எதிர்பார்ப்புகளையே தந்துள்ளது.

எமது பிரதேச செயலர்கள், பதவிநிலை அதிகாரிகள், கொரோனாத் தொற்று காலத்திலும் பாதிக்கப்பட்ட மக்களின் இடங்களுக்குச் சென்று அதனை அவதானித்து அதற்கான பரிகாரங்கள், நிவாரணங்களைப் பெற்றுத்தந்தனர். அதற்கான நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன் ஏனைய உத்தியோகத்தர்களும் உறுதுணையை வழங்கியுள்ளனர்.

எதிர்காலத்தில் அமைச்சின் செயலராகப் பணியாற்ற பெரும் உத்வேகத்தை இங்கு பணியாற்றிய காலம் எனக்குத் தந்துள்ளது - என்றார். (அ-ஒ-27)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அச்சுவேலியில் வன்முறைக்குழு வாள்களுடன் அட்டகாசம்

யாழ்ப்பாணம், டிசெ. 31
அச்சுவேலி பாரதி வீதியிலுள்ள வீட்டின் மீதும், அச்சுவேலி தென்மூலையிலுள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்தின் மீதும் வன்முறைக் கும்பல் நேற்று மாலை தாக்குதல் நடத்தியுள்ளது.
மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் வாள்கள் சகிதம் இந்தத் தாக்குதல்களை சில மணி நேரத்துக்குள் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.
தனிமையிலிருந்த மூதாட்டியின் வீட்டுக் கண்ணாடிகளை அவர்கள் அடித்து உடைத்து, படலையையும் கொத்தி சேதப்படுத்தி, பெற்றோல் குண்டையும் வீசி விட்டுச் சென்றுள்ளனர்.
பின்னர் அந்தக் குழு, மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்துக்குள் புகுந்து, அங்கு நின்ற மோட்டார் சைக்கிள் ஒன்றையும் வாள்களால் கொத்தி சேதப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது. (அ-ஒ-23)

## அரசாங்க பணியாளர்களுக்கு முற்பணம் அதிகபட்சம் ரூ. 4 ஆயிரமே வழங்கலாம்

கொழும்பு, டிசெ. 31
அரச ஊழியர்களுக்கு விசேட முற்பணம் வழங்குவது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.
2023 ஆம் ஆண்டில் அரசாங்க பணியாளர்களுக்கு அதிகபட்சமாக 4 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்டு இந்த முற்பணத்தைச் செலுத்துமாறு அனைத்து அமைச்சகங்கள், உள்ளூராட்சி மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கு பொது நிர்வாக அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.
முற்பணம் முதலாம் திகதி தொடங்கி பெப்ரவரி 28ஆம் திகதிக்குள் முடிக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டுக்குள் இந்த முற்பணம் முழுமையாக அறவிடப்படவேண்டும் என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-இ)

## ஓய்வூதியர்களுக்கான உயிர்வாழ் சான்றிதழுக்கான பதிவுகள் தென்மராட்சியில்

தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கான அடுத்த ஆண்டுக்கான உயிர்வாழ் சான்றிதழ் பதிவுகள் நேற்று முன்தினம் தொடக்கம் அந்தந்த கிராம அலுவலர் பிரிவுகளில் இடம்பெறுகின்றன என சாவகச்சேரி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். 2016 ஆண்டுக்கு முந்திய ஓய்வூதியர்கள் கிராமஅலுவலரால் வழங்கப்படும் பட்டியலில் கையொப்பம் இடுமாறும் 2016 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் ஓய்வுபெற்றவர்கள் விரலடையாளமும் இடல்வேண்டும். விரல் அடையாளம் இடுவோர் சாவகச்சேரி மக்கள் வங்கியிலேயே இடுதல் வேண்டும். மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம் என பிரதேச செயலர் மேலும் கூறினார். (ச-9)


**பணியாளர்கள் தேவை**
சாவகச்சேரியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர்கள் தேவை.
072 62 90 891
(cs22618)(2.6)

**புதுவருடக் கொண்டாட்டம்**
இன்று 3:1 இலவசம்
கோழிப்புக்கை, அப்பம்
YouTube Yarlpardy
51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
+9421 222 6868, +94777 340 026

**காணி விற்பனைக்கு**
யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் K.K.S. வீதியில் 1 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
077 315 1521
(cs22618)(2.6)


## வீணாக்கப்பட்ட தமிழகத்தின் அரிசி




### மதுராநகர் மக்கள் விசனம்

வவுனியா, டிசெ.31
வவுனியாவில் மக்களுக்கு வழங்கப்படாமல்களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த தமிழக அரிசி மூடைகள் பழுதடைந்த நிலையில் பொதுமக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
வவுனியா, ஆசிக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மதுராநகரிலேயே கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையில் தமிழக அரிசி மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
கண்டுபிடிக்கப்பட்ட அரிசி மூடைகள் புழுக்கள் மற்றும் வண்டுகளின் தாக்கத்துக்கு இலக்காகிப் பழுதடைந்துள்ளன என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.
மிகவும் பின்தங்கிய கிராமமான இந்தக் கிராம மக்கள் வெள்ள இடர் உட்பட பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.
தமிழக அரசினால் வழங்கப்பட்ட அரிசி மூடைகளை மக்களுக்கு பகிர்ந்தளிக்காது, களஞ்சியப்படுத்தி வீணாக்கியமை தொடர்பில் பொது மக்கள் ஆத்திரத்தையும், ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். (எ-110)


**வீடு வாடகைக்கு**
யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் இருவர் தங்கக்கூடியதாக வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு. தனியார் கல்விநிலையங்கள் அருகாமையிலுண்டு. சைவ உணவு உண்பவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.
076 201 7728
(cs22618)(2.6)

**உடற்பயிற்சி உபகரணம் விற்பனைக்கு**
பாவனையிலுள்ள நல்ல நிலையிலுள்ள Tread mill, Orbitreac என்பன உடன் விற்பனைக்குண்டு.
076 201 7728
(cs22617)(2.6)

**கட்டடம் வாடகைக்கு**
யாழ் - கச்சேரி - நல்லூர் வீதி இல. 135 இல் அமைந்துள்ள (நாவலர் வீதி சந்தியில்) மூன்று மாடி கட்டடம் வாடகைக்கு விடப்படும் (நிறுவனங்களுக்கு உகந்தது)
தொடர்பு: 077 600 2641
(பி.ப. 5.00 மணிக்கு பின்னர் தொடர்புகொள்ளவும்)
(cs 22052)(2.6)

**வேலையாள்கள் தேவை**
அளவெட்டியில் இயங்கும் Five Star மிக்சர் கொம்பனிக்கு தாமாகவே (Sweet Items) (எள்ளுருண்டை, கச்சான் அல்வா, பொரி உருண்டை) செய்யத்தெரிந்த வேலையாள்களும், பொதிசெய்வதற்கு பெண் வேலையாள்களும் தேவை.
(Cs 48379)(2/6)
077 077 6239

**பணியாளர்கள் தேவை**
யாழ். நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகை வியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
- கணக்காளர் (ஆண்) : A/L வர்த்தக துறையில் படித்த கணினி அறிவுடைய ஆண் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- விற்பனை உதவியாளர் (ஆண்)
சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்
நியூ லலிதாஸ் ஜுவல்லறி
இல.30, 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(CR 38865)(3/6)

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.
பார்வையிடும் நேரம்:- காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.
தொடர்பு:- ஜெயம் 077 8147 389
077 9865 457

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 72 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
தொடர்பு:- ஜெயம் 077 24 17 589
077 02 67 619


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப் பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.